# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/17 - 2024 දෙසැම්බර් මස 31 වැනි අඟහරුවාදා - 2024.12.31

*2417/17 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.-பி. 3/2013 (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பிமல் நிரோஷன் ரத்நாயக்க,
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2024, திசெம்பர் 16

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (உள்நாட்டுப் பயணங்களின்மீது ஈடுபட்டுள்ள கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடைமை

2. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், பின்வருவனபோன்றவையும் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (நீர்ப்பரப்புகளை வகுதிப்படுத்துதல்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கடற்பரப்பு வகுதிகள் “OR”, 1, 2, 3, 4 மற்றும் 5 இல் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களின்மீது சேவையாற்றுகின்ற கடலோடிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) நீளத்தில் இருபத்திநான்கு மீற்றர்களையும் அதற்குமேற்பட்டதையும் கொண்டுள்ள கப்பல்கள்;

(ஆ) எண்பது முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறையாதவையும் மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்படாதவையுமான கப்பல்கள்; அல்லது

(இ) எழுநூற்றி ஐம்பது கிலோவோட்டுக்குமேலான பிரதான உந்துகை எந்திரத்தொகுதிச் சக்தியுடன் நிறுவப்பட்ட கப்பல்கள்.

(2) ஒரு மீன்பிடிக் கலத்தின்மீது சேவையாற்றுகின்ற கடலோடிகளுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையன வாதலாகாது.

(3) இருநூற்றிப்பதினாறாம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் (இவ்வொழுங்குவிதிகளில் ‘‘பணிப்பாளர் தலைமையதிபதி’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கடலோடியொருவர் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தகைமைபெற்றுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இதற்கான அட்டவணை III றின் பாகம் அ மற்றும் பாகம் ஆ வில் குறித்துரைக்கப்பட்டவாறாகப் பணிகளினதும் பொறுப்பு மட்டங்களினதும் அடிப்படையில் தகுதி நியமங்கள் இருத்தல் வேண்டும்.

## பாகம் II

### பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளும்

3. (1) பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை I றின் நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கடற்பரப்பு வரையறைக்கும் அவ்வட்டவணையின் நிரை III றிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொன்னளவு வரையறைக்கும் அவ்வட்டவணையின் நிரை I றில் குறித்துரைக்கப்பட்டவாறான வகுப்பினவான சான்றிதழ்களை வழங்கலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II றின் நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கடற்பரப்பு வரையறைக்கும் அவ்வட்டவணையின் நிரை III றிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொன்னளவு வரையறைக்கும் அவ்வட்டவணையின் நிரை I றில் குறித்துரைக்கப்பட்டவாறான வகுப்பினவான சான்றிதழ்களை வழங்கலாம்.

## பாகம் III

### உட்பிரவேச நிபந்தனைகளும் தகவுடைமைத் தேவைப்பாடுகளும் - அலுவலர்களும் பதவியாணைபெறாத கடலோடிகளும்

4. ஒரு தகுதிச் சான்றிதழ் அல்லது ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும் பின்வருவனவற்றைக் காண்பித்தல் வேண்டும்:-

(அ) ஒரு பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) அவர் வகிக்கும் பதவியில் அவர் தொடர்பான கண்பார்வை நியமப் பரீட்சிப்புச் சான்றிதழொன்று; இப்பரீட்சிப்பு, அத்தகையவொரு பரீட்சிப்பை நடாத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவொரு மருத்துவத்தொழிலரினால் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும். இப்பரீட்சிப்பு, 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்;

(இ) அவர் வகிக்கும் பதவியில் அவர் தொடர்பான மருத்துவ மற்றும் உடற்றகுதிப் பரீட்சிப்புச் சான்றிதழொன்று; இப்பரீட்சிப்பு, அத்தகையவொரு பரீட்சிப்பை நடாத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவொரு மருத்துவத்தொழிலரினால் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும். இப்பரீட்சிப்பு, 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அலுவலர்களின் விடயத்தில், விண்ணப்பத்தேதிக்குமுன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட கப்பலின்மீதான சேவை தொடர்பான சான்றுரைகள். அத்தகைய சான்றுரைகள், எந்தக் கப்பலில் சேவை புரியப்பட்டுள்ளதோ அந்தக் கப்பலின் கப்பற்றலைவரின் அல்லது பிரதான பொறியியலாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு கம்பெனிப் பிரதிநிதியின் கையொப்பத்தின்கீழ் இருத்தல் வேண்டும்.

## பாகம் IV

### கப்பற்றளப் பகுதியிலுள்ள கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் பதவியாணைபெறாத கடலோடிகளின் பயிற்சிக்காகவும் தகைமைகளுக்காகவும் கட்டாயமான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்

5. (1) உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும், ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவானதுமான கப்பலொன்றில் சேவையாற்றுகின்றவரும் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ளவருமான ஒவ்வோர் அலுவலரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழை வழங்குவதற்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறைவாகவிருத்தலுமாகாது;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(ii) எண்பது முதல் ஐந்நூறு வரையிலான முழுமொத்தத் தொன்னளவைக்கொண்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; இது, பாலம் காவல் காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிகின்ற ஆகக்குறைந்தது ஆறு மாதங்களையேனும் உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(iii) எண்பது முழுமொத்தத் தொன்னளவை அல்லது அதற்கு மேற்பட்டதைக்கொண்ட கப்பற்றளப் பகுதியில் முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; ஆயின், முப்பத்தாறு மாதங்களைக்கொண்ட கடல்செல் சேவையிலிருந்து ஆகக்குறைந்தது ஆறுமாதங்களேனும் பாலம் காவல்காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிவதன்மூலம் பூர்த்திசெய்யப்பட்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) முன்னாள் இலங்கைக் கடற்படை அலுவலர்களின் விடயத்தில், எண்பது முழுமொத்தத் தொன்னளவைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட வணிகக் கலன்களின்மீது குறைந்தபட்சம் ஆறு மாதங்களைக்கொண்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் கடற்பயணப் பகுதியில் எண்பது முழுமொத்தத் தொன்னளவைக்கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றுறைக் கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை பூர்த்திசெய்யப்பட்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) சிறிய கலன்களின்மீது (நீளத்தில் இருபத்திநான்கு மீற்றர்வரை) முப்பத்தாறு மாதங்களைக்கொண்ட கடல்செல் சேவையுடன் படகுத் தலைவர் தரம் I என்ற சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) சிறிய கலன்களின்மீது (நீளத்தில் இருபத்திநான்கு மீற்றர்வரை) அறுபது மாதங்களைக்கொண்ட கடல்செல் சேவையுடன் படகுத் தலைவர் தரம் II என்ற சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஊ) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவைக்கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஆறுமாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையுடன் சமவாயத்தின் ஒழுங்குவிதி II/I றில் விதித்துரைக்கப்பட்டவாறாகச் சான்றளித்தலுக்கு இட்டுச்சென்ற அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(எ) செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையையும் மதிப்பீட்டையும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றின் உட்பந்திகள் ஆ (ii) மற்றும் ஆ (iii) என்பவற்றினால் தேவைப்படுத்தப்பட்ட கடல்செல் சேவை, கப்பற்றலைவரின் அல்லது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் நேரடி மேற்பார்வையின்கீழ் நிறைவேற்றப்பட்ட கடமைகளைப் புரிதலை உட்படுத்துதல் வேண்டும்.

6. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்ததுமான கப்பலொன்றின்மீதுள்ள ஒவ்வொரு கப்பற்றலைவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) எண்பது முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட, கரையோர நீர்ப்பரப்புகளுக்கண்மையில் ஈடுபட்டுள்ள ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பலின்மீது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவானவொரு கப்பலின்மீது குறைந்தபட்சம் பன்னிரெண்டுமாதக் கடல்செல் அனுபவத்துடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ii) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவானவொரு கப்பலின்மீது குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதக் கடல்செல் அனுபவத்துடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(iii) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவானவொரு கப்பலின்மீது முதன்மைத் துணையாளராகக் குறைந்தபட்சம் ஆறு மாதக் கடல்செல் அனுபவத்துடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட புறக்குறிப்பொன்றுடன் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிக்குமுன்னர் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினதான அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு கப்பலின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) முன்னாள் இலங்கைக் கடற்படை அலுவலர்களின் விடயத்தில், கடற்பயணப் பகுதியில் எண்பது முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றுறைக் கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; இது, எண்பது முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட வர்த்தகக் கலன்களின்மீது ஆறுமாதங்களைக்கொண்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஏவுகின்ற வகுதியில் குறைந்தபட்சம் ஆறுமாதங்களை உள்ளடக்குதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதி நியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

7. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பலொன்றின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறையாதவராக இருத்தலும் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(ii) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையொன்று; இது, ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுக்கேனும் பாலம் காவல்காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிவதனை உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(iii) எண்பது முதல் ஐந்நூறு வரையிலான முழுமொத்தத் தொன்னளவினவான கப்பல்களின்மீது முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையொன்று; இது, ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுக்கேனும் பாலம் காவல்காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிவதனை உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(இ) (i) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது, ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் அனுபவத்துடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ii) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது கப்பற்றலைவராக, அல்லது ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது கப்பற்றலைவராகப் பன்னிரெண்டுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) முன்னாள் இலங்கைக் கடற்படை அலுவலர்களின் விடயத்தில், ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கலன்களின்மீது கடற்பயணப் பகுதியில் குறைந்தபட்சம் ஆறுமாதக் கடல்செல் சேவையுடன் ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றுறைக் கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(உ) செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையையும் மதிப்பீட்டையும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

8. மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பலொன்றின்மீதுள்ள ஒவ்வொரு முதன்மைத் துணையாளரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறு மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(i) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது, பன்னிரெண்டுமாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையுடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ii) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(iii) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந் திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் நியமனங்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான

அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறைவாகவிராத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(iv) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது, முதன்மைத் துணையாளராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது கப்பற்றலைவராக மூன்றுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு புறக்குறிப்புடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிக்குமுன்னர் வழங்கப்பட்ட ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(v) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது, முதன்மைத் துணையாளராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது கப்பற்றலைவராக மூன்றுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு புறக்குறிப்புடன் ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(vi) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறு ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீதான கப்பற்றலைவராகப் பன்னிரெண்டுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது கப்பற்றலைவராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கையில் காவல் அலுவலரொருவராக முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் கப்பற்றலைவராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள தகுதிநிமியத்தை எதிர்கொள்கின்ற இயைபான உரித்தோற்றப் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையையும் மதிப்பீட்டையும் பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.

9. மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கடல்செல் கப்பலொன்றின்மீதான ஒவ்வொரு கப்பற்றலைவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக ஒரு தகுதிச்சான்றிதழை அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறு மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது தகவுக்கேற்றவாறு காவல் அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது

கப்பற்றலைவராக அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறு ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது கப்பற்றலைவராக நாற்பத்தெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட புறக்குறிப்பொன்றுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது கப்பற்றலைவர் ஒருவராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது கப்பற்றலைவராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வரையறைகளுடனான புறக்குறிப்புடன் வேறேதேனும் தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராகத் தகுதித் சான்றிதழொன்றை வைத்திருக்கையில் முதன்மைத் துணையாளராக ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

10. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான ஓர் இழுவைப்படகின்மீது சேவையாற்றுகின்ற ஒவ்வோர் இழுவைப்படகுத் துணையாளரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறைந்தவராக இருத்தலுமாகாது; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலர் ஒருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) இவ்வொழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலரொருவராகப் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல்

நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு இயைபான அதிகாரியினால் அங்கீகரிக்கப்படுவதற்கு இயன்றதாகவிருக்கவேண்டிய ஓர் இழுவைப்படகுத் துணையாளரொருவராக இழுவைப்படகுகளின்மீது அல்லது சிறுநிலை அலுவலராகவும் அதற்கு மேற்படவும் ஒரு சிறு பீரங்கிப் போர்க்கப்பலின்மீது குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளைக்கொண்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

11. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான ஓர் இழுவைப்படகின்மீது சேவையாற்றுகின்ற ஒவ்வோர் இழுவைப்படகுத் தலைவரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஒரு தகுதிச் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறு ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது இழுவைப்படகுத் துணையாளராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான இழுவைப்படகுகளின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஓர் இழுவைப்படகுத் துணையாளராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலராகப் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது இழுவைப்படகுத் துணையாளராக ஆகக்குறைந்தது ஆறுமாதங்களையேனும் உள்ளடக்குகின்ற பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது கப்பற்றலைவராக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது ஆகக்குறைந்தது ஆறுமாதங்களையேனும் உள்ளடக்கிய பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

12. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கடல்செல் இழுவைப்படகின்மீதான ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறைந்தவராகவிருத்தலுமாகாது;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(ii) மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையொன்று; இது, ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுக்கேனும் பாலம் காவல்காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிதலை உள்ளடக்குதல் வேண்டும்; அல்லது

(iii) மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையொன்று; இது, ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுக்கேனும் பாலம் காவல்காத்தலுடன் இணைந்த கடமைகளைப் புரிதலை உள்ளடக்குதல் வேண்டும்; அல்லது

(இ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது கப்பற்றலைவராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான இழுவைப்படகுகளின்மீது இழுவைப்படகுத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராக அல்லது ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஊ) முன்னாள் இலங்கைக் கடற்படை அலுவலர்களின் விடயத்தில், கடற்பயணப் பகுதியில் ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றுறைக் கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(எ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

13. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்ததுமான ஒரு கடல்செல் இழுவைப்படகின்மீதான ஒவ்வோர் இழுவைப்படகுத் துணையாளரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது காவல் அலுவலர் ஒருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை உடையவராகவிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; இது, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட இழுவைப்படகுகளில் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்களையேனும் உள்ளடக்கும்; அல்லது

(இ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 5 ஆம், 10 ஆம் ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறாக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களில் அல்லது இழுவைப்படகுகளில் முப்பத்தாறு மாதங்களைக்கொண்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம், 11 ஆம் ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறாக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது கப்பற்றலைவராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீதான கப்பற்றலைவராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக, இழுவைப்படகுகளின்மீது ஆகக்குறைந்தது ஆறுமாதங்களையேனும் கொண்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

14. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்ததுமான ஒரு கடல்செல் இழுவைப்படகின்மீதான ஒவ்வோர் இழுவைப்படகுத் தலைவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 13 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது முதன்மைத் துணையாளராக, இழுவைப்படகுத் துணையாளராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட இழுவைப்படகுகளின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இருபத்திநான்கு மாதங்களைக்கொண்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட இழுவைப்படகுகளின்மீது முதன்மைத் துணையாளராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அல்லது கப்பற்றலைவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் முதன்மைத் துணையாளராக அல்லது கப்பற்றலைவராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்வதற்குப் பணிப்பாளர்

தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு புறக்குறிப்புடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட இழுவைப்படகுகளின்மீது இழுவைப்படகுத் துணையாளராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத ஒரு கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான இழுவைப்படகுகளின் தலைவராக, மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான இழுவைப்படகுகளின்மீது தலைவரொருவராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த இழுவைப்படகுகளின்மீது முதன்மைத் துணையாளராக அல்லது தலைவராக நாற்பத்தெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் 1978 ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்மீதான சர்வதேசச் சமவாயத்தின் 1/10 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறு நாடுகளினால் வழங்கப்பட்ட கப்பற்றலைவரின் அல்லது துணையாளரின் புறக்குறிப்பொன்றுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஊ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது முதன்மைத் துணையாளராக, ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட ஓர் இழுவைப்படகின்மீது, இழுவைப்படகுத் துணையாளராக ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(எ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

15. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவரும் கடற்பயணஞ்சார் காவலின் பாகமாகவமைகின்றவருமான பதவியாணைபெறாத கடலோடி செல்லுபடியான திறமைச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) பதினாறு வயதுக்குக் குறைந்தவராக இருத்தலுமாகாது; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(ii) எண்பது முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; இது, கடல்சேவை சான்றுரையையும் கடவற் சான்றிதழையும் உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(iii) எண்பது முழுமொத்தத் தொன்னளவினவான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின்மீது கப்பற்றளப் பகுதியில் ஒன்பது மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை.

16. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள திறன்மிகுக் கடலோடியொருவர்-கப்பற்றளம், செல்லுபடியான திறமைச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 15 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகக் கடற்பயணஞ்சார் காவலொன்றின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடியொருவராகச் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பின்வரும் காலப்பகுதிகளுக்காகக் கப்பற்றளப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி அல்லது

(ii) ஒன்பது மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகமொன்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

## பாகம் V

## வானொலித் தொடர்பாடலும் வானொலித் தொழிற்படுத்துநர்களும்

17. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள எல்லாக் கப்பற்றள அலுவலர்களும் (தகுதிச் சான்றிதழ்களை வைத்திருப்போர்) உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்புமுறைமை மட்டுப்படுத்தப்பட்ட வானொலித் தொழிற்படுத்துநரின் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறைவானவராக இருத்தலுமாகாது;

(ஆ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(இ) இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஜீஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட வானொலித் தொழிற்படுத்துநரின் சான்றிதழை வைத்திருத்தலும் வேண்டும்.

## பாகம் VI

## எந்திரப் பகுதியில் கடல்சார் எந்திர அலுவலர்களினதும் பதவியாணைபெறாத கடலோடிகளினதும் பயிற்சிக்காகவும் தகைமைக்காகவும் கட்டாயமான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்

18. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்குக் குறைவான பிரதான உந்துகைச் சக்தியினால் வலுவூட்டப்பட்டதுமானவொரு கப்பலின்மீது ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியற் காவலொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் அலுவலரும், அல்லது காலாகாலம் ஆளில்லாதவோர் எந்திர அறையில் பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளர் அலுவலரும், செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினாறு வயதுக்குக் குறைவானவராக இருத்தலுமாகாது; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) சான்றளிக்கப்பட்ட எந்திர அலுவலரொருவரின் மேற்பார்வையின்கீழ் மூன்றுமாதங்களைக் கொண்ட எந்திர அறைக் காவல்காத்தலுட்பட இருநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது எந்திரப் பகுதியில் ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட இணைந்தவோர் செயலமர்வுத் திறமைகள் பயிற்சியும் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையும்; அல்லது

(ii) குதிரைவிசைச் சான்றிதழொன்றுடன் இருநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது எந்திரப் பகுதியில் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அல்லது

(iii) இருநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட பிரதான உந்துகை எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கப்பல்களின்மீது எந்திர அறைக் கடமைகளில் இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அல்லது

(iv) கடல்சார் அல்லது பொறிமுறை (ஒட்டோமபயில்) துறைகளில் ஆகக்குறைந்தது என்வீகியூ மட்டம் 3 சான்றளித்தலுடனேனும் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட பிரதான உந்துகை எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கப்பல்களின்மீது எந்திர அறைக் கடமைகளில் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அல்லது

(v) ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட கரை அடிப்படையிலான அனுபவத்துடனேனும் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட பிரதான உந்துகை எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கப்பல்களின்மீது எந்திர அறைக் கடமைகளில் இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அத்துடன்

(அ) கடல்சார் அல்லது பொறிமுறை (ஒட்டோமொபயில்) துறைகளில் என்வீகியூ மட்டம் 2 சான்றளித்தல்; அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஓராண்டு முழுநேரப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(இ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

19. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்குக் குறைவான பிரதான உந்துகைச் சக்தியினால் சக்தியூட்டப்பட்டதுமான கப்பலொன்றின்மீதான ஒவ்வொரு பிரதான எந்திர அலுவலரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) கரையோரத்திற்கண்மையிலான நீர்ப்பரப்புகளில் ஈடுபட்டுள்ள கப்பல்களின்மீது அல்லது வரையறையின்றி அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகப் பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இருநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்;

(ஆ) இருநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் பிரதான பொறியியலாளராக அல்லது இரண்டாவது பொறியியலாளராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்;

(இ) முன்னாள் இலங்கைக் கடற்படை அலுவலர்களின் விடயத்தில், வணிகக் கப்பல்களின்மீது ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுடனேனும் இருநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கடற்றுறைக் கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையுடன் எந்திரப்பகுதியில் கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

20. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதும் மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துதல் சக்தியைக் கொண்டதுமான ஒரு கப்பலின்மீதுள்ள பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது எந்திரப் பகுதியில் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத இணைந்த செயலமர்வுத் திறமைகள் பயிற்சியையும் அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையையும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) உள்நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள எழுநூற்றைம்பது கிலோவோட்டைக்கொண்ட அல்லது அதற்குக் குறைவான உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பிரதான எந்திர அலுவலராகச் செல்லுபடியான தகுதிச் சான்றிதழொன்றுடன் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) உள்நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள எழுநூற்றைம்பது கிலோவோட்டைக்கொண்ட அல்லது அதற்குக் குறைவான உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பிரதான எந்திர அலுவலராகச் செல்லுபடியான தகுதிச் சான்றிதழொன்றுடன் இருநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) கடலோடிகளுக்குப் பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் (கபசாகா) கோவை III/1 றுக்கிணங்க, கடலுக்குச்செல்லுமுன்னரான அங்கீகரிக்கப்பட்டவொரு கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவான உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகச் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றுடன் அல்லது தரம் I உரிமத்தைக்கொண்ட படகுப் பொறியியலாளராக இருநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஊ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான வணிகக் கப்பல்களின்மீது ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் பொறியியற் பகுதியில் சிறுநிலை அலுவலராக இலங்கைக் கடற்படைக் கலன்களில் இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அல்லது

(எ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது தகைமைபெற்ற பொறியியலாளர் அலுவலரொருவரின் மேற்பார்வையின்கீழ் எந்திர அறைக் கடமைகளில் முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஏ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

21. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவையும் மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துதல் சக்தியுடனானவையுமான கப்பல்களின்மீதுள்ள ஒவ்வோர் இரண்டாவது எந்திர அலுவலரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) கரையோரத்திற்கண்மையிலான நீர்ப்பரப்புகளில் ஈடுபட்டுள்ள கப்பல்களின்மீது இவ்வொழுங்குவிதிகளின் 20 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகப் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட கப்பல்களின்மீது வரையறையின்றி பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாகவிராத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக, பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இரண்டாவது பொறியியலாளராக அல்லது பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இரண்டாவது பொறியியலாளராகக் கடலிற்செல்வதற்கு இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) உள்நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைந்த உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பிரதான எந்திர அலுவலராக இருபத்திநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) இவ்வொழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகக் கப்பல்களின்மீது தரம் I உரிமத்துடன் படகுப் பொறியியலாளராக முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

22. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவையும் மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைந்த உந்துதல் சக்தியுடனானவையுமான கப்பல்களின்மீதான பிரதான எந்திர அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகப் பன்னிரெண்டு மாதங்களுக்கு அல்லது பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இவ்வொழுங்குவிதிகளின் 21 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இரண்டாவது எந்திர அலுவலரொருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இரண்டாவது பொறியியலாளராகக் கடலிற்செல்வதற்கு இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இரண்டாவது எந்திர அலுவலரொருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது ஒரு பிரதான எந்திர அலுவலராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இரண்டாவது பொறியியலாளராகக் கடலிற்செல்வதற்கு இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் அல்லது எழுநூ ற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக அல்லது இரண்டாவது எந்திர அலுவலராக ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(உ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

23. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள இழுவைப்படகுகளின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள கரையோர அலுவலர் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது தகைமைபெற்ற பொறியியலாளர் அலுவலரொருவரின் மேற்பார்வையின்கீழ் எந்திரப் பகுதியில் முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அத்துடன்

(இ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

24. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவையும் ஆறாயிரம் கிலோவோட்டுக்குக் குறைந்த உந்துதல் சக்தியுடனானவையுமான இழுவைப்படகுகளின்மீதானஇரண்டாவது கரையோர எந்திர அலுவலர் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இழுவைப்படகுகளின்மீது கரையோரப் பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இவ்வொழுங்குவிதிகளின் 21 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இரண்டாவது எந்திர அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இரண்டாவது எந்திர அலுவலராகக் கடலிற்செல்வதற்கு இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இரண்டாவது எந்திர அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது பிரதான எந்திர அலுவலரொருவராக ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் பிரதான பொறியியலாளராகக் கடலிற்செல்வதற்கு இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(உ) இவ்வொழுங்குவிதிகளின் 20 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும் அல்லது பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக (கரைக்கண்மையிலான பயணம்) கடலிற்செல்வதனை இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

25. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஆறாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துதல் சக்தியுடனான இழுவைப்படகுகளின்மீதான பிரதான கரையோர எந்திர அலுவலர் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது இரண்டாவது எந்திர அலுவலரொருவராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையுடன் இவ்வொழுங்குவிதிகளின் 24 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது, பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவராகப் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது இரண்டாவது எந்திர அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது தகவுக்கேற்ற அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் இரண்டாவது பொறியியலாளராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(இ) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடனான கப்பல்களின்மீது, இரண்டாவது எந்திர அலுவலராகப் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது பிரதான எந்திர அலுவலராகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது தகவுக்கேற்ற அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையுடன் பிரதான பொறியியலாளராகக் கடலிற்செல்வதனை இயலச்செய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதுமான புறக்குறிப்பொன்றை வைத்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஈ) மூவாயிரம் கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட இழுவைப்படகுகளின்மீது எந்திர அறைக் கைவினைஞன் ஒருவராக முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(உ) செயல்முறைக் கோவையிற்றரப்பட்டுள்ள தகுதிநியமத்தை எதிர்கொள்கின்ற இயைபான உருத்தோற்றப் பயிற்சியுட்பட, அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

26. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவரும் ஒரு பொறியியற் காவலின் பாகமாகவமைகின்றவருமான ஒவ்வொரு பதவியாணைபெறாத கடலோடியும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) பதினாறு வயதுக்குக் குறையாதவராக இருத்தலும் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று; அத்துடன்

(ii) எழுநூற்றைம்பது கிலோவோட்டினதான உந்துகைச் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது எந்திரப் பகுதியில் ஆறுமாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையொன்று; இது, கடற்சேவைச் சான்றுரையை உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(இ) இருநூற்றைம்பது முதல் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கிடையேயான உந்துகைச் சக்தியைக்கொண்ட கலன்களின்மீது பதினெட்டு மாதங்களுக்குக் குறையாத அல்லது எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது ஒன்பது மாதங்களுக்குக் குறையாத அல்லது தகவுக்கேற்ற அடிப்படையிலான அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; அத்துடன்

(ஈ) எந்திரப் பகுதியில் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட இலங்கைக் கடற்படைக் கலன்களின்மீது ஆகக்குறைந்தது இருபத்திநான்கு மாதங்களையேனும் கொண்ட, எழுநூற்றைம்பது

கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது ஆறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை.

27. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு திறன்மிகுக் கடலோடி-எந்திரம் செல்லுபடியான திறமைச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 26 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாகப் பொறியியற் காவலொன்றின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடியொருவராகச் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) எந்திரப் பகுதியில் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாதது; அல்லது

(ii) எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது ஒன்பது மாதங்களுக்குக் குறையாத சேவையையும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தையும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

28. உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு பதவியாணைபெறாத மின்சாரக் கடலோடியும் செல்லுபடியான திறமைச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) பதினாறு வயதுக்குக் குறைவாக இருத்தலுமாகாது; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்வொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; அத்துடன்

(ii) எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது எந்திரப் பகுதியில் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவை; இது, கடற்சேவைச் சான்றுரையை உள்ளடக்குதலும் வேண்டும்; அல்லது

(இ) ஆகக்குறைந்தது என்வீகியூ மட்டம் 3 சான்றளித்தலுடனேனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடலுக்குச்செல்லுமுன்னரான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துடனேனும் ஆகக்குறைந்தது பயிற்சிபெறும் மின்சாரவியலாளராகவேனும் அல்லது பயிற்சிபெறும் மின்கம்பியிடுநராகவேனும் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது ஒன்பது மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஆகக்குறைந்தது பயிற்சிபெறும் மின்சாரவியலாளராகவேனும் அல்லது பயிற்சிபெறும் மின்கம்பியிடுநராகவேனும் எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்டவொரு கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

## பாகம் VII

## விசேட தேவைப்பாடுகள்

29. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்ட பின்வரும் வகுதிகளுக்கான பயிற்சிக்காகவும் தகைமைகளுக்காகவும் கட்டாயமான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் பின்வருவோருக்கும் பின்வருவனவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) எண்ணெய், இரசாயன மற்றும் வாயுத் தாங்கிக்கப்பல்களின்மீதான கப்பற்றலைவர்களுக்கும், அலுவலர்களுக்கும், பதவியாணைபெறாத கடலோடிகளுக்கும்;

(ஆ) பயணிக் கப்பல்களின்மீதான கப்பற்றலைவர்களுக்கும், அலுவலர்களுக்கும், பதவியாணைபெறாத கடலோடிகளுக்கும், வேறு ஆளணியினருக்கும்; அத்துடன்

(இ) எல்லாக் கடலோடிகளுக்குமான காப்புப் பரிச்சயப்படுத்துகைக்கும், அடிப்படைப் பயிற்சிக்கும், அறிவுறுத்தலுக்கும்.

30. (1) கடற்பயண அல்லது கடல்சார் பொறியியலில் ஆதார மட்டத்தில் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும், மேற்றள அல்லது எந்திரச் செயல்முறைக் கோவையின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடிக்காக விதித்துரைக்கப்பட்ட பணிக்காக இயைபான பயிற்சியைப் பூர்த்திசெய்வதற்கும் தகுதிநியமத்தை எதிர்கொள்வதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) கடற்பயண அல்லது கடல்சார் பொறியியலில் திறன்மிகுக் கடலோடியாக ஆதார மட்டத்தில் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும், மேற்றள அல்லது எந்திரச் செயல்முறைக் கோவையின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடிக்காகக் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்துக்கு இணங்கியொழுகுவதுடன் சேர்த்து மேலதிகமாக, திறன்மிகுக் கடலோடியின் கப்பற்றள அல்லது எந்திரச் செயல்முறைக் கோவையில் விதித்துரைக்கப்பட்ட பணிகளுள் எல்லாவற்றுக்காகவும் இயைபான பயிற்சியைப் பூர்த்திசெய்வதற்கும் தகுதி நியமத்தை எதிர்கொள்வதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் VIII

## கடல்செல் சேவையைக் கணிப்பீடுசெய்தல்

31. (1) குறிப்பிட்ட ஏதேனும் தகுதிச் சான்றிதழுக்காக அலுவலர்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட தகைமையளிக்கும் கடல்செல் சேவையானது, தகுதிவாய்ந்தமையை மதிப்பீடுசெய்யத் தொடங்கும் தேதிக்கு முற்போந்தவொரு பத்தாண்டுக் காலப்பகுதியினுள் புரியப்படுதல் வேண்டுமென்பதுடன் தகுதிபற்றிய மதிப்பீடு தொடங்கும் தேதிக்கு முற்போந்த ஐந்தாண்டுகளினுள் கடல்செல் சேவையின் பன்னிரெண்டு மாதகாலப்பகுதியொன்றை உள்ளடக்குதலும் வேண்டும்.

(2) பாரம்பரிய காவல்காத்தல் வழக்கமுறையல்லாத வேறு வழக்கமுறையில் தொழிற்படுத்தப்படும் கப்பல்களில் வேலைச் செயல்முறைகளில் தொழிலுக்கமர்த்தப்பட்ட பொறியியலாளர் அலுவலர்களினால் புரியப்பட்ட கடல்செல் சேவை, அத்தகைய வேலைச் செயல்முறைகள் சமமான அனுபவத்தை வழங்குகின்றனவெனச் சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படின், தகைமையளிக்கின்ற கடல்செல் சேவையாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(3) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவையும் எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்டவையுமான கப்பல்களின்மீது ஓர் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக அல்லது காலாகாலம் ஆளமர்த்தப்படாத ஓர் எந்திர அறையில் பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளராகத் தகுதிச் சான்றிதழை வைத்திருப்போராக வருவதற்கு உட்கருதுகின்ற கடல்சார் பொறியியற் கிளையிலுள்ள இலங்கைக் கடற்படையின் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரின் ஏலவேயுள்ள அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் எவையேனுமிருப்பின் அவை, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு தகைமையளிக்கின்ற வணிகக் கப்பற் கடல்செல் சேவையை, பயிற்சியை மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாகவமைதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கைக் கடற்படைக் கப்பல்களின்மீது புரியப்பட்ட உந்துகை நேரம், எழுநூற்றைம்பது கிலோவோட் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட கப்பல்களின்மீது ஓர் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையிலுள்ள பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவரின், அல்லது காலாகாலம் ஆளமர்த்தப்படாத ஓர் எந்திர அறையிலுள்ள பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளரின் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற கரையோரத்துக்கண்மையிலுள்ள பயணங்களுக்காகத் தகுதிச் சான்றிதழ் வைத்திருப்போராக வருவதற்கு உட்கருதுகின்ற கடல்சார் பொறியியற் கிளையிலுள்ள இலங்கைக் கடற்படையின் சிறுநிலை அலுவலர்களும் எந்திர அறைக் கைவினைஞர்களும் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகையவொரு தேர்வுவிழைநரின் ஏலவேயுள்ள அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் எவையேனுமிருப்பின் அவை, பொறியியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகத் தகைமையளிக்கின்ற வணிகக் கப்பற் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாகவமைதல் வேண்டும். பொறியியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கைக் கடற்படைக் கப்பல்களின்மீது புரியப்பட்ட உந்துகை நேரம், எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட உந்துகைச் சக்தியைக்கொண்ட ஆளமர்த்தப்பட்ட ஓர் எந்திர அறையில்

பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவரின் அல்லது காலாகாலம் ஆளமர்த்தப்படாத ஓர் எந்திர அறையில் பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளரின் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவையும் இலங்கையின் உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது அல்லது இழுவைப்படகுகளின்மீது கடற்பயணக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழை வைத்திருப்போராக வருவதற்கு உட்கருதுகின்ற நிறைவேற்று அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படை அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகையவொரு தேர்வுவிழைநரின் ஏலவேயுள்ள அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் எவையேனுமிருப்பின் அவை, சம்பந்தப்பட்ட பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறு தகைமையளிக்கின்ற வணிகக் கப்பலின் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாகவமைதல் வேண்டும். இயைபான பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையின் உள்நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான இலங்கைக் கடற்படைக் கப்பல்களின்மீது புரியப்பட்ட உந்துகை நேரம் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையாகக் கருதப்படும்.

(6) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவையும் இலங்கையின் உள்நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின்மீது கடற்பயணக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகத் தகுதிச் சான்றிதழை வைத்திருப்போராக வருவதற்கு உட்கருதுகின்ற நிறைவேற்று அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படை அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகையவொரு தேர்வுவிழைநரின் ஏலவேயுள்ள அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் எவையேனுமிருப்பின் அவை, சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு தகைமையளிக்கின்ற வணிகக் கப்பலின் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாகவமைதல் வேண்டும். இயைபான பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையின் உள்நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக்கும் மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்கும் இடையேயான இலங்கைக் கடற்படைக் கப்பல்களின்மீது புரியப்பட்ட உந்துகை நேரம் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையாகக் கருதப்படும்.

32. இவ்வொழுங்குவிதிகளில்:-

''திறன்மிகுக் கடலோடி-கப்பற்றளம்'' என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி II/5 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற பதவியாணைபெறாத கடலோடியொருவர் என்று பொருளாகும்;

''திறன்மிகுக் கடலோடி-எந்திரம்'' என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/5 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற பதவியாணைபெறாத கடலோடியொருவர் என்று பொருளாகும்;

''நிருவாகம்'' என்பது, இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

''அங்கீகரிக்கப்பட்ட'' என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஒரு பிரதான பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்ட என்று பொருளாகும்;

''அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீடு'' என்பது, சமவாயத்தின்கீழ் சான்றிதழ்களையும் புறக்குறிப்புகளையும் வழங்கும் நோக்கத்துக்காகப் பரீட்சையும் மதிப்பீடுகளும் உட்பட, பயிற்சி மற்றும் நியமங்களின் மொத்தத் தேவைப்பாட்டை விதித்துரைக்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறானதுமான கடலோடிகளுக்கான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்று என்று பொருளாகும்;

''தகுதிச் சான்றிதழ்'' என்பது, சமவாயத்தின் அத்தியாயங்கள் II, III, IV அல்லது VII இன் ஏற்பாடுகளுக்கிணங்கக் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் ஜீஎம்டிஎஸ்எஸ் வானொலித் தொழிற்படுத்துநர்களுக்காக வழங்கப்பட்டுப் புறக்குறிப்பிடப்பட்டதும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு மட்டத்தில் சம்பந்தப்பட்ட பதவியில் சேவையாற்றுவதற்கும் பணிகளைப் புரிவதற்கும் அதனைச் சட்டமுறையாக வைத்திருப்பவருக்கு உரித்தளிக்கின்றதுமானவொரு சான்றிதழ் என்று பொருளாகும்;

''திறமைச் சான்றிதழ்'' என்பது, சமவாயத்திலுள்ள பயிற்சி, தகுதிகள் அல்லது கடல்செல் சேவையின் இயைபான தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டுள்ளனவெனக் கூறி, ஒரு கடலோடிக்கு வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ் தவிர்ந்த ஒரு சான்றிதழ் என்று பொருளாகும்;

''பிரதான எந்திர அலுவலர்'' என்பது, கப்பலின் பொறிமுறை மற்றும் மின்சார நிறுவுகையின் பொறிமுறை உந்துகைக்கும் மற்றும் தொழிற்பாட்டுக்கும் பேணுகைக்கும் பொறுப்பாகவுள்ள சிரேட்ட எந்திர அலுவலர் என்று பொருளாகும்;

''முதன்மைத் துணையாளர்'' என்பது, பதவிவரிசையில் கப்பற்றலைவருக்கு அடுத்தவராகவுள்ளவரும் கப்பற்றலைவருக்கு இயலாமை ஏற்படும் பட்சத்தில் கப்பலின் ஏவுகை, கட்டுப்பாடு அல்லது பொறுப்பு அவர்மீது வந்துறுபவருமான கப்பற்றள அலுவலர் என்று பொருளாகும்;

''செயல்முறைக் கோவை'' என்பது, அவசியமாகவுள்ளவாறு திருத்தப்படக்கூடியதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதும் கடலோடிகளின் கடலோரக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளதுமானவோர் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு ஆவணம் அல்லது கையேடு என்று பொருளாகும்;

''கம்பெனி'' என்பது, கப்பலின் சொந்தக்காரர் அல்லது வேறேதேனும் ஒழுங்கமைப்பு அல்லது கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பைக் கப்பற் சொந்தக்காரரிடமிருந்து ஏற்றுள்ளவரும், அத்தகைய பொறுப்பை ஏற்பதன்மீது இவ்வொழுங்குவிதிகளினால் கம்பெனியின்மீது விதிக்கப்பட்ட எல்லாக் கடமைகளையும் பொறுப்புக்களையும் கையேற்பதற்கு உடன்பட்டுள்ளவரும், முகாமையாளர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநர் போன்றவருமான ஆள் என்று பொருளாகும்;

''சமவாயம்'' என்பது, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆந்தேதியன்று வலுவுக்குவந்ததும், 1978 ஆம் ஆண்டு யூலை 7 ஆந்தேதியன்று கடலோடிகளுக்கான பயிற்சி மற்றும் சான்றளித்தலின்மீதான சர்வதேச மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்மீதானதுமான சர்வதேசச் சமவாயம் என்று பொருளாகும் என்பதுடன், அடுத்துப்பின்னரான எல்லாத் திருத்தங்களையும் உள்ளடக்கும்;

''உள்நாட்டுப் பயணம்'' என்பது, இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து இலங்கையிலுள்ள அதே அல்லது வேறொரு துறைமுகத்துக்கான ஒரு பயணம் என்று பொருளாகும்;

''பொறியியலாளர் அலுவலர்'' என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதிகள் III/1, III/2 அல்லது III/3 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற ஓர் அலுவலர் என்று பொருளாகும்;

''பிரதான பரீட்சகர்'' என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட, கப்பற்றலைவர்களின் மற்றும் கப்பற்றளப் பகுதி ஆளணியினரின் அல்லது எந்திரப் பகுதி ஆளணியினரின் பரீட்சகர் என்று பொருளாகும்;

''பணி'' என்பது, கப்பலின் தொழிற்பாட்டுக்காக, கடலில் உயிர்காப்புக்காக மற்றும் கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்காக அவசியமானவையும் கடலோடிகளின் பயிற்சி, சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் (கபசாகா) கோவையில் குறித்துரைக்கப்பட்டவையுமான பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளின் தொகுதி என்று பொருளாகும்;

''ஜீஎம்டிஎஸ்எஸ்'' என்பது, உலகளாவிய கடல்சார் இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை என்று பொருளாகும்;

''கப்பற்றலைவர்'' என்பது, ஒரு கப்பலை ஏவுகின்ற ஆள் என்று பொருளாகும்;

''மாதம்'' என்பது, ஒரு பஞ்சாங்க மாதம் அல்லது ஒரு மாதத்துக்குக் குறைவான காலப்பகுதிகளைக்கொண்ட முப்பது நாட்கள் என்று பொருளாகும்;

''கரையோரத்துக்கண்மையிலான பயணங்கள்'' என்பது, நிருவாகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறாக அத்தகைய பயணங்களின்போது காப்பான புகலிடங்களுக்கான அண்மை தொடர்பான குறிப்பிட்ட குறிப்பீட்டுக்கமைய, பங்களாதேஷ், இந்தியா, மாலைத்தீவு, மையன்மார் மற்றும் இலங்கையிலிருந்தான ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து சொல்லப்பட்ட நாடுகளிலுள்ள வேறேதேனும் துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்குக் கரையோர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்களின் பயணங்கள் என்று பொருளாகும்;

''என்விகியூ மட்டம்'' என்பது, அவை ''ஏற்றங்கீகரிக்கப்பட்ட தான்புரிதொழில்சார் நியமங்களின் அடிப்படையிலிருப்பின், வேலையடிப்படையிலான மதிப்பீட்டின்மீதிருப்பின், மற்றும் அவை தான்புரிதொழில்சார் தகுதியை அளிக்குமிடத்து'' ஆர்கியூஎவ் தகைமைகள் என்று பொருளாகும்;

''அலுவலர்'' என்பது, தேசிய சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் அத்தகையவராகப் பெயர்குறிக்கப்பட்ட அல்லது அத்தகைய பெயர்குறிப்பு இல்லாதவிடத்து கூட்டு உடன்படிக்கைமூலம் அல்லது வழக்காறுமூலம் பெயர்குறிக்கப்பட்ட கப்பற்றலைவர் அல்லது பதவியாணைபெறாத கடலோடி அல்லது திறன்மிகுக் கடலோடி தவிர்ந்த, கப்பற்றொகுதியுறுப்பினர் ஒருவர் என்று பொருளாகும்;

''பயணிக் கப்பல்'' என்பது, திருத்தப்பட்டவாறாக, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தில் (எஸ்ஓஎல்ஏஎஸ்) வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஒரு பயணிக் கப்பல் என்று பொருளாகும்;

''உந்துகைச் சக்தி'' என்பது, கப்பலின் பதிவுச் சான்றிதழின்மீது அல்லது வேறு அலுவலகமுறையான ஆவணத்தின்மீது காணப்படுகின்ற கப்பலின் பிரதான உந்துகை எந்திரத்தொகுதி எல்லாவற்றினதும் கிலோவோட்டுக்களிலான மொத்த அதிகபட்சத் தொடர்ச்சியான வீதமிடப்பட்ட வெளியீட்டுச் சக்தி என்று பொருளாகும்;

''வானொலித் தொழிற்படுத்துநர்'' என்பது, வானொலி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட தோதான சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

''பதவியாணைபெறாத கடலோடி'' என்பது, கப்பற்றலைவர் அல்லது அலுவலர் தவிர்ந்த ஒரு கப்பலின் கப்பற்றொகுதியுறுப்பினர் என்று பொருளாகும்;

''மட்டுப்படுத்தப்பட்ட ஜீஎம்டிஎஸ்எஸ் வானொலித் தொழிற்படுத்துநர்'' என்பது, இலங்கையின் உள்நாட்டுப் பயணங்களினுள் பிரத்தியேகமாகத் தொழிற்படுவதற்குத் தகைமைபெற்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

''கடல்செல் சேவை'' என்பது, ஒரு சான்றிதழை வழங்குதலுக்கு அல்லது மீளச்செல்லுபடியாக்குதலுக்கு அல்லது வேறு தகைமைக்கு இயைபான கடல்செல் கப்பலொன்றின்மீதான சேவை என்று பொருளாகும்;

''கடலிற்செல்லும் கப்பல்'' என்பது, உள்ளூர் நீர்ப்பரப்புகளில் அல்லது துறைமுக ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற புகலிடமிடப்பட்ட நீர்ப்பரப்புகளின் அல்லது கடற்பரப்புகளின் உள்ளான, அல்லது அவற்றுக்கு மிக்க அருகாமையிலுள்ள நீர்ப்பரப்புகளில் புறநீங்கலாகக் கடற்பயணஞ்செய்கின்றவை தவிர ஒரு வியாபாரக் கப்பல் என்று பொருளாகும்;

''இரண்டாவது எந்திர அலுவலர்'' என்பது, பிரதான எந்திர அலுவலருக்கு இயலாமை ஏற்படும் பட்சத்தில் கப்பலின் பொறிமுறை உந்துகையினதும் பொறிமுறை மற்றும் மின்சார நிறுவுகைகளின் தொழிற்பாட்டுக்கும் பேணுகைக்குமான பொறுப்பு, பதவிவரிசையில் பிரதான எந்திர அலுவலருக்கு அடுத்தவராகவுள்ள எந்த எந்திர அலுவலரை வந்துறுமோ அந்த எந்திர அலுவலர் என்று பொருளாகும்;

''இழுவைப்படகு'' என்பது, துறைமுகங்கள், ஆறுகள் மற்றும் கப்பல்துறைகளிலும் அவற்றிலிருந்தும் கடலிலுள்ள கப்பல்களை இழுப்பதற்கு அல்லது உதவுவதற்கு அல்லது சுமைப்படகுகளை, வள்ளங்களை மற்றும் வேறு சிறு மரக்கலன்களை இழுப்பதற்கு அல்லது தள்ளுவதற்குப் பயன்படுத்தப்படுவதும், சிறிய அளவினதான சரக்குக் கொள்ளளவுடனோ அல்லது அதுவின்றியோ பொறிமுறையில் உந்தப்படுவதுமானவொரு கப்பல் என்று பொருளாகும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 3 (2))

| *நிரை I*<br>*சான்றிதழ்களின் வகுப்புகள்* | *நிரை II*<br>*கடற்பரப்பு வரையறை* | *நிரை III*<br>*தொன்னளவு வரையறை* |
|---|---|---|
| உள்நாட்டுப் பயணம் - காவல் அலுவலர் (கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்) | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - கப்பற்றலைவர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - காவல் அலுவலர் (கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்) | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - முதன்மைத் துணையாளர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - கப்பற்றலைவர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுத் துணையாளர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுத் தலைவர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஐந்நூறு முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகு (கடற்பயணஞ்சார் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்) | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுத் துணையாளர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுத் தலைவர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - கடற்பயணக் காவலின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடி | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எண்பது முழுமொத்தத் தொன்னளவிலிருந்து மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுவரை |
| உள்நாட்டுப் பயணம் - திறன்மிகுக் கடலோடி-கப்பற்றளம் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எண்பது முழுமொத்தத் தொன்னளவிலிருந்து மூவாயிரம் முழுமொத்தத் தொன்னளவுவரை |

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3 (3))

| *நிரை I*<br>*சான்றிதழ்களின் வகுப்புகள்* | *நிரை II*<br>*கடற்பரப்பு வரையறை* | *நிரை III*<br>*சக்தி வரையறை* |
|---|---|---|
| உள்நாட்டுப் பயணம் - எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவான உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவான உந்துகை சக்தியுடனான கப்பல்களின்மீது பிரதான எந்திர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவாக |

| *நிரை I*<br>*சான்றிதழ்களின் வகுப்புகள்* | *நிரை II*<br>*கடற்பரப்பு வரையறை* | *நிரை III*<br>*சக்தி வரையறை* |
|---|---|---|
| உள்நாட்டுப் பயணம் - மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துகைச் சக்தியுடனான கப்பல்களின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இரண்டாவது எந்திர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவான உந்துகை சக்தியுடனான கப்பல்களின்மீது பிரதான எந்திர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| இழுவைப்படகுகளின்மீது பொறியியற் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள கரையோர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஆறாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுகளின்மீதான இரண்டாவது எந்திர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஆறாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - இழுவைப்படகுகளின்மீதான பிரதான எந்திர அலுவலர் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | ஆறாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - பொறியியற் காவலின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடி | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - திறன்மிகுக் கடலோடி – எந்திரம் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | எழுநூற்றைம்பது கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - பொறியியற் காவலின் பாகமாகவமைகின்ற பதவியாணைபெறாத கடலோடி | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - திறன்மிகுக் கடலோடி – எந்திரம் | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |
| உள்நாட்டுப் பயணம் - பதவியாணைபெறாத மின்சாரக் கடலோடி | 0R, 1, 2, 3, 4 மற்றும் 5 | மூவாயிரம் கிலோவோட்டுக்குக் குறைவாக |

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 2 (4))

**பாகம் அ**
**பணிகள்**

(அ) கடற்பயணம்;

(ஆ) சரக்குக் கையாளுதலும் சேகரித்து வைத்தலும்;

(இ) கப்பலின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்துதலும் கப்பலிலுள்ள ஆட்களைக் கவனித்தலும்;

(ஈ) கடல்சார் பொறியியல்;

(உ) மின்சார, இலத்திரனியல் மற்றும் கட்டுப்பாட்டுப் பொறியியல்;

(ஊ) பேணுகையும் பழுதுபார்த்தலும்; அத்துடன்

(எ) வானொலித் தொடர்பாடல்கள்.

**பாகம் ஆ**

**பொறுப்பின் மட்டங்கள்**

(அ) முகாமைத்துவ மட்டம் (கப்பற்றலைவர், முதன்மைத் துணையாளர், பிரதான எந்திர அலுவலர் மற்றும் இரண்டாவது எந்திர அலுவலர்).

(ஆ) தொழிற்பாடுசார் மட்டம் (கடற்பயணஞ்சார் காவல்காத்தல் அலுவலர், பொறியியற் காவல்காத்தல் அலுவலர், இலத்திரனியல் - தொழினுட்ப அலுவலர் மற்றும் வானொலித் தொழிற்படுத்துநர்).

(இ) ஆதார மட்டம் (திறன்மிகுக் கடலோடி-கப்பற்றளம், திறன்மிகுக் கடலோடி- எந்திரம், இலத்திரனியல் - தொழினுட்பப் பதவியாணைபெறாத கடலோடி மற்றும் காவல்காத்தல் பதவியாணைபெறாத கடலோடி).

EOG 01 - 0012

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.